பதிவு எண். M 6311 ★ தொலைபேசி: 61331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 19] சென்னை: கார்த்திகை 9 (25—11—71) வியாழன் வெளியூர்: கார்த்திகை 10 (26—11—71) வெள்ளி [இதழ்: 136

சரியான வார்த்தை இந்திய மொழிகளில் கிடைக்கவில்லையாம்

சென்னை, நவ. 25—

'நியூசன்சு' என்ற ஆங்கில வார்த்தைக்குச் சரியான வார்த்தை இந்திய மொழிகளில் இல்லையாம்.

மத்திய சட்டங்களை இந்திய மொழிகளில் மொழிபெயர்க்கும் கமிஷன், அந்த வார்த்தைக்குச் சரியான இந்திய மொழி வார்த்தை கண்டுபிடிப்பதற்காக நீண்ட நேரம் விவாதித்தபின்

(4-ம் பக்கம் பார்க்க)

மாற்றுக் கருத்து நசுக்கப்படுவதில்லை

இந்திய அரசியலில் இந்நிலை முக்கியத்துவம் பெற்றிருக்கிறது

சனநாயக முறையிலேயே மாநிலங்களின் உரிமைகளுக்கு நாங்கள் வாதாடிவருகிறோம்

சுமை குறைந்த -- பலம் வாய்ந்த மத்திய அரசே எங்கள் குறிக்கோள்; அமெரிக்கச் செய்தியாளர்களிடம் முதலமைச்சர் கலைஞர் விளக்கம்

நியூயார்க், நவ. 25—

"மத்திய அரசின் பலத்தைக் குறைத்துவிட வேண்டும் என்பதற்காக நாங்கள் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் கேட்கவில்லை; அது எங்கள் இலட்சியக் குறிக்கோளும் அல்ல; மிகவும் முக்கியமான பிரச்சினைகளில் மத்திய அரசு கவனம் செலுத்திடும் வகையில் மத்திய அரசின் சுமைகளைக் குறைப்பதற்காகத்தான் நாங்கள் விரும்புகிறோம்.

"மாநில அரசுகளுடன் கலந்து பேசியபிறகு பல பிரச்சினைகள்மீது மத்திய அரசு முடிவு எடுக்கிறது; அதே சனநாயக அடிப்படையில்தான் அதிக அதிகாரம் கேட்கிறோம்; சனநாயக அடிப்படையில் எந்தக் கோரிக்கையையும் எழுப்புவதக்கு அனுமதியும் உண்டு -- ஆதரவும் உண்டு.

"மாற்றுக் கருத்து என்பது, நசுக்கப்பட்டுவிடக்கூடாதது -- சனநாயகப்பூர்வமான கருத்து வெளியீடு அனுமதிக்கப்பட்டு உற்சாகப்படுத்தப்படும் -- என்பதே எங்களது நாட்டு அரசியலில் மிக முக்கியமான அம்சமாகும்"

என்று தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள், பால்டிமோர் நகரில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியின்போது தெள்ளத் தெளிவுற விளக்கிக் கூறினார்.

'வாஷிங்டன் போஸ்ட்' பத்திரிகையைச் சேர்ந்த திரு. வாரன் உன்னு என்பவரும் -- 'பால்டிமோர் சன்' எனும் பத்திரிகையைச் சார்ந்த திரு. ஆடம் கிளேமோர் என்பவரும் முதல்வரைச் சந்தித்துப் பல்வேறு பிரச்சினைகள்மீது வினாக்களை எழுப்பினர்; அவற்றுக்கு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அளித்த பதில்கள் வருமாறு:—

கேள்வி:— "மாநில அரசுகளுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டும் என்று நீங்கள் வாதாடுகிறீர்களே -- இதனால் மத்திய அரசு பலவீனமடைந்து விடாதா?"

பதில்:— "எங்களுடைய கோரிக்கை, பலம் வாய்ந்த மத்திய அரசுக்கு உட்பட்ட மாநில அரசுகள்தான்; மாநில அரசுகள் பலம் உள்ளதாக இல்லையென்றால், மத்திய அரசு வலமுடன் இருக்க முடியாது."

தி.மு.க. இலட்சியமும் குடும்பக் கட்டுப்பாட்டு திட்ட இயக்கமும்

கேள்வி:— "குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்ட இயக்கத்துடன் மிகவும் ஒன்றிணைந்த முதலமைச்சரைக்கொண்ட ஒரே மாநிலம் தங்களுடைய மாநிலம் தானே?"

முதல்வர்:— "ஆம்; இதற்குக் காரணம், நாங்கள் பிரதிநிதியாக இருக்கும் அரசியல் கட்சி (தி.மு.க.), துவக்கக் காலத்திலிருந்தே சமுதாய மாறுதல் என்பதை தன்னுடைய இலட்சியமாகக் கொண்டு இயங்கி வந்ததுதான்; குடும்பக் கட்டுப்பாட்டு இயக்கமும் -- நீதியின்பாற்பட்ட சீரான சமுதாயமும், ஒன்றாக இணைந்து நோக்கக்கூடியவைதான்; எங்களுக்கு மத, குறுகிய சமூக நம்பிக்கைகள் எதுவும் இல்லை -- இந்தப் பிரச்சினையில் நாங்கள் ஈடுபடாமல் தடுக்க!"

தலைமையமைச்சரின் சரியான கண்ணோட்டம்

கேள்வி:— "தற்போது மிகப் பெரிய பெரும்பான்மை இருக்கின்ற காரணத்தால், தலைமையமைச்சர் இந்திரா, முடிவுகளை உறுதியோடு எடுப்பவராக மாறியிருக்கிறாரா?"

முதல்வர்: — "பிரச்சினைகளில் இரண்டுவகை உண்டு;-- ஒன்று சில பிரச்சினைகளில், முடிவுகள், எல்லாவிதமான சாதக பாதகங்களையும், விளைவுகளையும் சீர்தூக்கிப்பார்த்துக் கவனமாக முடிவு எடுப்பது; அடுத்தது — சில பிரச்சினைகளில், வேகமான முடிவு எடுப்பது என்பது முக்கியமானதாக இருக்கும்; இந்த இரண்டையும் போட்டுக் குழப்ப வேண்டியதில்லை; எங்களது பார்வையில் தலைமையமைச்சர், தம்மை எதிர்நோக்கும் பிரச்சினைகளில் சரியான கண்ணோட்டம் செலுத்துகிறார் என்பதே யாகும்."

அகதிகள் பிரச்சினை- ஆலோசிக்க மாநாடு

அமைச்சர் என். வி. நடராசன் கூட்டுகிறார்

திருச்சி, நவ 24—

இந்தியாவுக்குக் கிழக்கு வங்கத்திலிருந்து ஏராளமான அகதிகள் வருகையால் எழுந்துள்ள நிலைமை பற்றி விவாதிப்பதற்காகத் தமிழகத்தில் உள்ள தொழிற்சாலை அதிபர்கள் -- தொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகள் கொண்ட மாநாடு ஒன்றைத் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் என். வி. நடராசன் அவர்கள் கூட்டியுள்ளார்.

இம்மாநாடு சென்னையில் நவம்பர் 29-ந் தேதி நடக்கும்.

தமிழ்நாடு சாதனைகள் - ஆராய பிறமாநிலங்கள் முன்வருவதுண்டா?

கேள்வி:— "தாங்கள் முன்மாதிரியான அரசாங்க அமைப்பைப் படைத்த ஒரு மாநிலத்தின் உதாரணத் தலைவர்; எப்படி இந்நிலையை அடைந்தீர்கள் என்பது மற்றி ஆராய்வதற்குப் பிற மாநிலங்கள் முன்வருவதுண்டா?"

முதல்வர்:— "எங்கள் மாநிலத்தின் சாதனைகளைப் பற்றி ஆராய சில மாநிலங்கள் வருவதுண்டு."

சுமை பெரிதாகிறது --- இதயங்களை தொட்டே உதவி கேட்கிறோம்

கேள்வி:— "உங்கள் (இந்திய) அரசின் திட்டங்களை, அகதிகள் பிரச்சினை எப்படிப் பாதிக்கும்? ஒவ்வோர் ஆண்டும் ஒரு கோடி பேர் உங்கள் மக்கள் தொகையில் சேர்ந்து கொண்டிருக்கின்றனரே — அப்படியிருக்க, நீங்கள் இதற்காக ஏன் உதவி கேட்கிறீர்கள்?"

முதல்வர்:— "இந்த இரண்டுக்கும் வேறுபாடு உண்டு; கிழக்கு வங்கத்திலிருந்து வரும் மக்களில் பெரும்பாலோர் வயதானவர்களாகவும், பலமிழந்தவர்களாகவும் இருக்கின்றனர்; அவர்கள் அரசாங்கத்தினரால் முழு அளவில் கவனிக்கப்பட வேண்டியவர்களாக இருக்கின்றனர்; ஆனால், மக்கள் தொகையில் பெருக்கம் என்பது இயற்கையான வளர்ச்சியைப் பொருத்தது; சம்பாதிக்கும் குடும்பங்களின் ஒரு அங்கமாகவும் அது இருக்கிறது; ஆகவே, (அகதிகள் பிரச்சினை எனு) நாட்டுச் சுமை என்பது மிகப் பெரிதாகிறது; அதனால் தலைமையமைச்சர் மத்திய அரசிலும், நாங்கள் மாநில அரசிலும் வறுமையை எதிர்க்கும் போருக்கான திட்டங்களின் வேகத்தைக் குறைக்கவும், நிறுத்தவும் வேண்டிவருகிறது; இந்த வகையில், தற்போதைய சுமைகள் எங்களை மிகவும் மோசமான முறையில் பாதிக்கின்றன.

"நாங்கள் உதவி கேட்கிறோம் என்றால், மடியில் கை வைத்துப் பணம் கேட்கவில்லை -- இதயத்தைத் தொட்டுத்தான் கேட்கிறோம்."

மத்திய அரசைப் பாதிக்கும் எதுவும் எங்களுக்கும் பாதகமே!

கேள்வி:— "வெகு தூரத்திலுள்ள வங்க தேச நிகழ்ச்சிகளில், 'தமிழ்நாட்டிலுள்ள உங்கள் மக்களுக்கு அவ்வளவு ஈடுபாடு இல்லை' எனும் கருத்து நிலவுகிறதே!"

முதல்வர்:— "உங்கள் கருத்து தவறு; இந்தியாவின் பாதுகாப்பும் ஒருமைப்பாடும் பாதிக்

(4-ம் பக்கம் பார்க்க)

வெளிநாட்டு மக்கள் வெளியேறுகின்றனரா?

இராவல்பிண்டி, நவ. 25—

எல்லையில் நெருக்கடி நிலைமை நாளும் வளர்ந்து வருவதைக் கருத்தில் கொண்டு லாகூரில் உள்ள அமெரிக்கா -- பிரிட்டிஷ் -- ஜப்பான் -- சுவீடன் ஆகிய நாடுகளைச் சேர்ந்த அவசியமல்லாத குடிமக்கள் பாகிஸ்தானுக்கு உள்ளேயோ வெளியிலோ எல்லைப் பகுதியைவிட்டுத் தூரத்தில் சென்றுவிடுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றனர் என்று இந்தத் தூதரகங்களின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்; ஆயினும், எல்லாக் குடிமக்களையும் வெளியேறச்செய்ய வேண்டுமென்ற திட்டமில்லை என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

ஆனால் மேற்குப் பாகிஸ்தானிலிருந்து வெளிநாட்டவர் வெளியேறுவதைப்போல கிழக்கு வங்கத்திலிருந்து வெளிநாட்டார் வெளியேறிக் கொண்டிருக்கவில்லை. ஐ. நா. நிவாரண ஊழியர்கள் மட்டும் 30 பேர் டாக்காவிலிருந்து பாங்காக் சென்றிருக்கின்றனர்.

ஜெர்மானியர் நிலை

லாகூரிலிருந்து வெளிநாட்டவர் வெளியேறுவதைத் தொடர்ந்து மேற்கு ஜெர்மனியைச் சேர்ந்த தொழில் நுட்ப நிபுணர்கள் -- வியாபாரிகள் ஆகியோர் 40 பேர் இராவல்பிண்டிக்கு வந்து சேர்ந்தனர்.

இந்த ஜெர்மானியர்களில் சிலர் லாகூரிலிருந்து 272 கிலோ மீட்டர் தூரம் இரவிலேயே பயணம் செய்தனர்; லாகூரை விட்டு வெளியேறுமாறு தங்களுக்குத் தங்கள் தூதரகம் உத்தரவிட்டிருப்பதாக அவர்கள் தெரிவித்தனர்.

பிரிட்டிஷார் நிலை

புதுடில்லி, நவ. 25—

போர் நெருக்கடியின் காரணமாக மேற்குப் பாகிஸ்தானில் உள்ள பிரிட்டிஷ் குடிமக்கள், பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றுவிடுமாறு பாகிஸ்தானில் உள்ள இங்கிலாந்து தூதர் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

லாகூர் பகுதியில் மட்டும் 300 பிரிட்டிஷ்காரர்கள் வாழ்கிறார்கள்.

அமெரிக்கர் நிலை

வாஷிங்டன், நவ. 25—

இந்தியாவுக்கும் -- பாகிஸ்தானுக்கும் போர் நெருக்கடி முற்றிவருவதால், வங்காள தேசத்தில் உள்ள அமெரிக்கர்களை அமெரிக்காவுக்கு வரும்படி அழைத்துக்கொள்வது பற்றி அமெரிக்க அரசாங்கம் ஆலோசனை செய்து வருகிறது.

வங்காள தேசத்தில் ஏறத்தாழ 300 அமெரிக்கர்கள் இருக்கிறார்கள்.

சமரசம்—சமாதானம் மூலமே பலன் காண முடியும்

[*]

போரைவிட இதுவே சிறந்ததாகும்

பாகிஸ்தான் ஆட்சியாளர்கள் இதனை உணருவது அவசியம்

'அதிரடி' நடவடிக்கையில் இறங்கினால் சரியான 'பதிலடி' கிடைத்தே தீரும்— தலைமையமைச்சர் இந்திரா காந்தி அறிவுரை

புதுடில்லி, நவ. 25—

"பாகிஸ்தான் டாங்கிகள் தகர்க்கப்பட்ட சம்பவமும் -- பாகிஸ்தான் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்ட சம்பவமும், முழுக்க முழுக்க அந்த வட்டாரம் சம்பந்தப்பட்டதாகும்.

"இந்தச் சம்பவங்களுக்காக, 'இந்தியாவில் அவசர நிலைமை பிரகடனம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை' என்று கருதுகிறோம்; 'போர் தொடங்கவேண்டும்' என்ற எண்ணமோ, 'நிலைமையை மோசமாக்க வேண்டும்' என்ற எண்ணமோ இந்தியாவுக்கு கிடையாது.

"பாகிஸ்தானில் அவசர நிலைமை பிரகடனம் செய்யப்பட்டிருக்கிறது; அங்கு நடப்பது இராணுவ ஆட்சி; அப்படியிருக்க, அவசர நிலைமை பிரகடனம் செய்ததில் அர்த்தமே இல்லை; தன் மக்களையும் -- உலகத்தையும் ஏமாற்றவே பாகிஸ்தான் அரசாங்கம் அவசர நிலைமையைப் பிரகடனம் செய்திருக்கிறது; பாகிஸ்தானை இந்தியா தாக்குவதாக வெளிநாடுகளை நம்பச் செய்யவும் -- அனைத்து நாடுகளின் கவனத்தை கவரவுமே பாகிஸ்தான், 'அவசர நிலைமை'யை அறிவித்துள்ளது.

"இப்போது நடந்த சம்பவங்களுக்காக நாம் அவசர நிலைமை பிரகடனம் செய்யாவிட்டாலும், 'இந்தியாவின் பாதுகாப்புக்கு அது அவசியம்' என்ற நிலை ஏற்படும்போது, நாமும் அவசர நிலைமையைப் பிரகடனம் செய்வோம்.

"இதற்கிடையில் நாட்டு மக்கள் பதட்டப்படாமல் இருக்கவேண்டும்; பாகிஸ்தான் இராணுவ அரசு ஏதாகிலும் அதிரடி நடவடிக்கையில் இறங்கினால் அதற்குச் சரியான பதிலடி கொடுக்க நமது படை வீரர்களும் -- மக்களும் உறுதிகொண்டிருக்கிறார்கள்.

"போரைக் காட்டிலும் -- சுதந்தரத்தையும், சனநாயகத்தையும் ஒடுக்குவதைக் காட்டிலும், சமாதான வழியே -- அதாவது, சமாதானப் பேச்சு -- சமரசத்தின்மூலம் மட்டுமே பலன் காணமுடியும் என்பதைப் பாகிஸ்தான் ஆட்சியாளர்கள் உணர வேண்டும்"

என்று தலைமையமைச்சர் இந்திரா காந்தி, தெளிவுற விளக்கிக் கூறினார்; நேற்று, நாடாளுமன்ற எதிர்கட்சித் தலைவர்களைச் சந்தித்துப் பேசியதை அடுத்து எல்லை நிலைமைபற்றி மக்களவையில் அறிக்கை ஒன்றைத் தாக்கல் செய்தார்; அந்த அறிக்கையின் முழு விவரம் வருமாறு :—

பழியை நம்மீது சுமத்தப் பார்க்கிறார்

"பாகிஸ்தான் அதிபர் யாகியா கான், அவசர நிலைமையைப் பிரகடனம் செய்திருக்கிறார். அவர் செய்துவரும் காரியங்களில் இதுதான் உச்சக் கட்டமாகும்.

வங்காள தேசப் பிரச்சினையிலிருந்து உலக நாடுகளின் கவனத்தைத் திருப்புவதற்காகவே அவசர நிலைமையை அவர் பிரகடனம் செய்திருக்கிறார்.

வங்காள தேசப் பிரச்சினையை யாகியா கான்தான் உருவாக்கினார்; இப்போது அந்தப் பழியை நம்மீது போடப் பார்க்கிறார்.

ஏய்ப்பதற்கு முயற்சி

பாகிஸ்தானில் ஏற்கனவே இராணுவ ஆட்சி நடக்கிறது; கடந்த 8 மாதங்களாக வங்காள தேச மக்களுடன் போரில் ஈடுபட்டிருக்கிறது; இந்தியாவின்மீது படையெடுப்பதாக கடந்தமூன்று மாதங்களாக நம்மை மிரட்டி வந்திருக்கிறது.

நிலைமை இப்படி இருக்கும்போது, அவசர நிலைமை பிரகடனம் செய்திருப்பதில் அர்த்தமே இல்லை; பாகிஸ்தான் மக்களையும் -- உலக நாடுகளையும் ஏமாற்றுவதற்காகவே அவசர நிலைமை பிரகடனம் செய்யப்பட்டிருக்கிறது.

தீர்வு காண விரும்பவில்லை

ரம்சான் விழாவில் யாகியா கான் வெளியிட்ட அறிக்கையைப் பார்த்தபோது, 'உலகத் தலைவர்களின் புத்திமதியைக் கேட்டு அரசியல் அடிப்படையில் பிரச்சினைக்குத் தீர்வு காண்பார்' என்று நம்பினோம்; ஆனால், அவசர நிலைமை பிரகடனம் செய்திருப்பதைப் பார்த்தால், பிரச்சினைக்குத் தீர்வு காண்பதை அவர் விரும்பவில்லை என்றே தெரிகிறது.

சொந்த நாட்டை விடுவித்து வருகிறார்கள்

வங்காள தேசத்தில் மழை காலம் முடிந்துவிட்டது; பாகிஸ்தான் இராணுவத்தினரின் திட்டங்களைச் சுதந்தரப் படையினர் தவிடுபொடியாக்கி வருகிறார்கள்.

சுதந்தரப் படையினருக்கு அந்த நாட்டு மக்களே ஆதரவு கொடுக்கிறார்கள்.

மனிதருக்குரியமதிப்புடன் நாடு திரும்ப வேண்டும்

பாகிஸ்தான் இராணுவத்தினரால் விரட்டியடிக்கப்பட்ட 1 கோடி அகதிகளை நாம் கவனித்து வருகிறோம்; அவர்கள் பாதுகாப்பு உத்தரவாதத்துடனும் -- மனிதருக்குரிய மதிப்புடனும் தங்கள் சொந்த வீடு வாசல்களுக்குத் திரும்புவதற்கான நிலைமையை உருவாக்க இந்தியா உறுதி கொண்டிருக்கிறது; எனவே, விரைவில் அவர்கள் திரும்பிச் செல்ல உரிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

அட்டூழியத்திற்கு இதோ ஒரு சான்று

பாகிஸ்தான் இராணுவத்தினர் நம் எல்லையில் தொடர்ந்து சுடுவதன் மூலம் உயிர்ச் சேதமும் -- பொருட் சேதமும் ஏற்படுத்தி வருகிறார்கள்; வேண்டுமென்றே பாகிஸ்தான் போர் விமானங்கள் நம் எல்லையில் பல முறை ஊடுருவல் செய்துள்ளன; ஒரு முறை காஷ்மீர் தலைநகரான ஸ்ரீநகருக்கு மேலேயே பறந்து சென்றது.

பாகிஸ்தான் ஒற்றர்களும் -- சதி வேலைக்காரர்களும் நம இரயில்களையும் -- பாலங்களையும் வெடி வைத்துத் தகர்க்கிறார்கள்.

கடந்த 8 திங்களில் பாகிஸ்தான் படையினர் 890 தடவைகள் நம் எல்லையில் துப்பாக்கிச் சூடு நடத்தியிருக்கின்றனர்; இதுபற்றி 66 முறை பாகிஸ்தானிடம் எதிர்ப்புத் தெரிவித்துள்ளோம்.

பாகிஸ்தான் போர் விமானங்கள் நம் எல்லையில் ஊடுருவி உள்ளன; இதுபற்றி 17 முறை பாகிஸ்தானுக்கு எதிர்ப்புக் கடிதம் எழுதியுள்ளோம்; இத்தனையையும் செய்துவிட்டு, 'எல்லையில் இந்தியா படையைக் குவித்து வைத்திருக்கிறது' என்று பாகிஸ்தான் பிரசாரம் செய்கிறது.

எல்லையை நோக்கி டாங்கிப் படைகள்

கடந்த 21-ம் நாளன்று இந்திய எல்லையிலிருந்து 5 மைல் தூரத்தில் பாகிஸ்தான் இராணுவத்திற்கும் -- சுதந்தரப் படையினருக்கும் இடையே போர் நடந்தது; அப்படியே பாகிஸ்தான் டாங்கிப் படை இந்திய எல்லையை நோக்கி வந்தது.

இந்திய வீரர்கள் திருப்பித் தாக்கியதில் பாகிஸ்தானின் 13 டாங்கிகள் சேதம் அடைந்தன.

போர் விமானங்கள் நுழைந்ததன் விளைவு

நவ. 22-ம் நாளன்று பாகிஸ்தானின் 'சேபர் ஜெட்' போர் விமானங்கள் கல்கத்தா அருகே இந்திய எல்லைக்குள் நுழைந்தன; இந்திய 'நாட்' போர் விமானங்கள் அதை எதிர்த்துப் போரிட்டு 3 விமானங்களைச் சுட்டு வீழ்த்தின; அதிலிருந்து குதித்த பாகிஸ்தான் விமானிகள் 2 பேர் நம எல்லைக்குள் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்."

குற்றவாளிகளுக்கு நன்னடத்தைப் பயிற்சி

நிபுணர்கள் குழு அமைக்க அமைச்சர் செ. மாதவன் இசைவு

சென்னை, நவ. 23—

"குற்றவாளிகளுக்கு நன்னடத்தைப் பயிற்சி அளிப்பது சம்பந்தமாக நல்வாழ்வு அதிகாரிகளுக்கு ஆலோசனை கூற, டாக்டர்கள் --உளவியல் நிபுணர்கள் -- உளநோய் மருத்துவர்கள் போன்றவர்களைக்கொண்ட நிபுணர் குழுக்களை நியமிப்பது அவசியமானதேயாகும்"

என்றுத் தமிழகச் சட்டத்துறை அமைச்சர் செ. மாதவன் அவர்கள் குற்றவாளிகளுக்கு நன்னடத்தைப் பயிற்சி தருவது -- மற்றும் அது சம்பந்தமான பிற நடவடிக்கைகள் பற்றிய மாநில மாநாட்டில் கலந்துகொண்டு பேசுகையில் ஒப்புக்கொண்டார்.

விசாரணைக் கைதிகளாக உள்ள சிறுவர்களை சிறையில் தனி இடங்களில் வைக்கவேண்டும் என்றும், இதற்கான யோசனைகளைத் தாம் வரவேற்பதாகவும் அவர் கூறினார்.

தற்போது சிறைகளில் பல சிறுவர்கள் வயதுவந்த கைதிகளுடன் வைக்கப்படுகிறார்கள் என்பது குறித்து அவர் வருத்தம் தெரிவித்தார்.

குற்றம் செய்தவர்களைச் சிறையில் கைதிகளாக வைப்பதற்கு ஆகின்ற செலவுகளைவிட அவர்களுக்கு நன்னடத்தைப் பயிற்சி தரும் முறைக்குக் குறைவான செலவுகளே ஆகின்றன என்றும், எனவே, இந்த முறையை விரிவான அடிப்படையில் செயல்படுத்த அரசாங்கம் தயாராக இருக்கிறது என்றும் அவர் கூறினார்.

நாவலர் நெடுஞ்செழியன்

கல்வியமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், இம் மாநாட்டை துவக்கி வைத்தார்.

தலைமை நீதிபதி கே. வீராசாமி தலைமை வகித்தார்; 'நல்வாழ்வு அதிகாரிகளுக்கு நிபுணர் ஆலோசனைக் குழுக்களை அரசாங்கம் அமைக்க வேண்டும்' என்று அவர் யோசனை தெரிவித்தார்.

உயர் நீதிமன்றப் பதிவாளர் டி. சௌந்திரபாண்டியன் வரவேற்றார்.

தலைமை மாகாண மாஜிஸ்திரேட் எஸ். நடராசன் நன்றி கூறினார்.

நிர்ப்பந்தங்களுக்கு இந்தியா பணியாது

புதுடில்லி, நவ. 24—

"பாகிஸ்தானுடன் போர் தவிர்க்க முடியாதது அல்ல; 'போர் நடக்குமா, நடக்காதா' என்பது பாகிஸ்தானையே பொறுத்திருக்கிறது.

"கிழக்கு வங்காளத்திலிருந்து விரட்டப்பட்ட ஒரு கோடி அகதிகளும் பாதுகாப்பாகவும் -- கௌரவமாகவும் திரும்பும் சூழ்நிலையைப் பாகிஸ்தான் தோற்றுவித்தால், போர் நடக்க வேண்டியிராது; பாகிஸ்தான் அப்படிச் செய்யாவிட்டால், அதைப்பற்றி என்ன செய்ய வேண்டுமென்பதை இந்தியா யோசிக்க வேண்டியிருக்கும்.

"எல்லையிலிருந்து நமது படைகளைத் திரும்பப்பெற வேண்டும் என்ற அனைத்து நாட்டு நிர்ப்பந்தத்துக்கு இந்தியா பணியாது; இந்தியா மீது அம்மாதிரி நிர்ப்பந்தம் கொண்டு வந்தால், 'இந்தியாவிலுள்ள ஒரு கோடி வங்க தேச அகதிகளையும் திரும்பச் செய்யும் பொறுப்பை அனைத்து நாட்டு நிறுவனங்கள் மேற்கொள்ளட்டும்' என்று சொல்வோம்.

"எல்லையிலிருந்து தனது படைகளைப் பாகிஸ்தான் திரும்பப் பெறுவிட்டால், இந்தியாவும் தனது படைகளைத் திரும்பப் பெறுது.

"பாகிஸ்தானிடமிருந்து இந்தியாவுக்கு அபாயம் நீடிக்கின்றவரையில் -- அகதிகள் திரும்பத் தொடங்கும் வரையில், இந்தியப் படைகளை எல்லையிலிருந்து திரும்பப் பெறப்படமாட்டாது."

—அமைச்சர் ஜெகஜீவன்ராம்

(விமானத் தலைமை அதிகாரிகள் கூட்டத்தில்)

தேர்தல் செலவுகள்

மத்திய அமைச்சர் தகவல்

புதுடில்லி, நவ. 24—

"இவ்வாண்டு பிப்ரவரித் திங்களில் நடைபெற்ற தேர்தலுக்கு ரூ 9,56,20,417 செலவாகியிருக்கிறது.

"மாநில அரசுகள், முதலில், மத்திய அரசின் சார்பில் தேர்தல் செலவுகளைச் செய்கின்றன; பின்னர் அத்தொகையை மத்திய அரசிடமிருந்து பெற்றுக்கொள்கின்றன"

என்று மத்திய சட்டத் துறை துணையமைச்சர் என். எஸ். சௌதிரி தெரிவித்தார்.

உலக அமைதிக்கு அச்சுறுத்தல்

பிரிட்டிஷ் பிரபுக்கள் சபையில் வலியுறுத்தல்

இலண்டன் நவ. 24—

"இந்தியா -- பாகிஸ்தான் நெருக்கடியால் உலக அமைதிக்கே அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதால் அந்நெருக்கடியைப் பிரிட்டன் ஐ. நா. பாதுகாப்புச் சபையில் எழுப்ப வேண்டும்"

என்று பிரிட்டிஷ் பிரபுக்கள் சபையில் நேற்று வற்புறுத்தப்பட்டது.

கிராமங்களுக்கு மின்சார வசதி

ரூ. 150 கோடி செலவிடப்படும்

புதுடில்லி, நவ. 24—

எல்லாக் கிராமங்களுக்கும் மின்சார வசதி அளிக்க மத்திய அரசு புதிய திட்டம் தயாரித்திருக்கிறது.

நாடாளுமன்ற மேலவையில் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் கே. எல். ராவ் கூறியதாவது :—

"எல்லாக் கிராமங்களுக்கும் மின்சார இணைப்புக் கொடுக்க 10 ஆண்டுத் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது; இதை நிறைவேற்ற ரூ. 2,270 கோடி செலவாகும்.

10 ஆண்டுக் காலத்திற்குள் 48,70,000 கிணறுகளுக்கு மின் இணைப்புக் கொடுக்கப்படும்.

2,33,000 கிராமங்களுக்கு 10 ஆண்டுகளுக்குள் மின் இணைப்புக் கொடுக்கப்படும்; ஒவ்வொரு ஆண்டும் ரூ. 150 கோடி இதற்காகச் செலவிடப்படும்."

வாழ்க்கையில் வெற்றிபெற கடின உழைப்பு அவசியம்

அமைச்சர் நாவலர் வலியுறுத்தல்

சென்னை, நவ. 24—

"வாழ்க்கையில் வெற்றிபெற சிறந்த வழி கடின உழைப்பேயாகும்"

என்று தமிழ்நாடு கல்வி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், திருவல்லிக்கேணி பெண்கள் தொழில் பயிற்சிப் பள்ளி—பெண்கள் பலநோக்குத் தொழில் நுட்பக் கழகம் ஆகியவற்றின் ஆண்டு விழாவுக்குத் தலைமை தாங்கிப் பேசுகையில் வலியுறுத்தினார்.

"பெண்கள், கூட்டுறவுச் சங்கங்களையும், சிறு வர்த்தகக் கடைகளையும் நடத்தலாம்; ஆடவர்கள் கடினமாக உழைக்க வேண்டும்" என்றும் அவர் அப்போது குறிப்பிட்டார்.

நாவலர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு :—

"நம் நாட்டில் பெண்களுக்கு அதிக வேலை வாய்ப்புகள் இல்லை; ஆசிரியைகள் -- டாக்டர்கள் -- நர்சுகள் -- குமாஸ்தாக்கள் போன்ற ஒரு சில குறிப்பிட்ட துறைகளில் மட்டும்தான் அவர்கள் வேலை செய்ய வாய்ப்புகள் இருக்கின்றன.

இந்த நிலை நீடித்துக்கொண்டே போனால், பெண்கள் மத்தியிலும் வேலையில்லாத் திண்டாட்டம் வளரும்; எனவே பெண்களுக்கு அதிக வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தித் தரவேண்டும்.

உடல் உழைப்பு அதிகம் தேவைப்படாத வேலைகள் பெண்களுக்கே ஒதுக்கப்பட வேண்டும்; எடுத்துக்காட்டாக, கடைகள் வைத்து வியாபாரம் நடத்துவது -- கூட்டுறவுப் பண்டகசாலைகளை நிர்வகிப்பது போன்றவைகள் பெண்களிடமே ஒப்படைக்கப்பட வேண்டும்.

பண்டங்களுக்கு உரிய பணத்தை வாங்கிக்கொண்டு அவைகளை விற்பதற்கு ஆண்கள் தேவை இல்லை; பெண்களே போதும்.

ஆண்கள் மண் வெட்டி -- கடப்பாரை போன்ற ஆயுதங்களைக் கொண்டு விவசாயம் செய்வது -- தொழிற்சாலைகளில் கடினமான பணிகளை மேற்கொள்வது ஆகிய துறைகளில் ஈடுபட வேண்டும்.

பெண்களுக்கு அதிக வேலை வாய்ப்பு அளிக்க எட்டாவது வகுப்புவரை மாணவர்-மாணவிகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்க பெண்களை மட்டும் நியமிக்கலாமா என்று அரசு ஆலோசனை செய்துவருகிறது.

நகை மோகம் வேண்டாம்

தமிழ்நாட்டில் பெண்களிடம் தங்க நகை மோகம் அதிகமாக இருக்கிறது; தங்களிடம் உள்ள பணத்தை நகைகளாகச் செய்து வைத்துக்கொண்டு அழகு பார்க்காமல், அந்தப் பணத்தைத் தொழில்களில் முதலீடு செய்ய அவர்கள் முன்வரவேண்டும்; அப்போதுதான் நாட்டில் தொழில் வளம் பெருகும்; பொருளாதாரமும் வளரும்.

கல்வித் திட்டத்தில் மாறுதல்

நாம் உயர்நிலைப் பள்ளிக்கூடங்களிலும் -- கல்லூரிகளிலும் ஒரே மாதிரியான பாடங்களைப் படித்து வெளிவரும் மாணவர்களையே உருவாக்கிக்கொண்டிருக்கிறோம்; இதனால் ஒவ்வொரு துறைகளிலும் தனிப் பயிற்சி பெற்ற நிபுணர்கள் கிடைப்பது இல்லை.

இந்தக் குறையைப் போக்கக் கல்வித் திட்டத்தில் மாறுதல் தேவை என்று நாங்கள் அடிக்கடி கூறிவருகிறோம்; இந்த மாறுதலை அரசாங்கத்தால் செய்ய முடியாது; பல்கலைக் கழக சிண்டிகேட்டும், அகடாமிக் கவுன்சிலும் இதில் கவனம் செலுத்தி கல்வித் திட்டத்தில் மாறுதல் செய்யவேண்டும்."

துளசிங்கப்பெருமாள் கோவில் வீதியில் பள்ளிக்கான புதிய கட்டடத்தையும் -- கண்காட்சியையும் அமைச்சர் திறந்து வைத்தார்; தொழில் பள்ளி சான்றேடுகளையும் அவர் வழங்கினார்.

பள்ளியின் முதல்வர் திருமதி கன்னியம்மாள் இரவுப் பள்ளியைத் திறமையாக நடத்துவதாக அவர் பாராட்டினார்.

தேசிய சிறுவர் பள்ளித் தலைமை ஆசிரியை திருமதி தங்கம் ஆண்டறிக்கை படித்தார்.

ஆலோசனை போர்டுத் தலைவர் டி. புருடோத்தமன் வரவேற்றார்.

குழு உறுப்பினர் மெய்கண்டார், அமைச்சருக்கும் -- நடிகர் ஓ. ஏ. கே. தேவருக்கும் வரவேற்பு இதழ் வாசித்தளித்தார்.

விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தில் முதலமைச்சர் கலைஞர்

அனுமதிக்காத இடங்களையும் அழைத்துச் சென்று காண்பித்தனர்

விண்வெளி ஆய்வுகளைச் சமாதானப் பணிகளுக்குப் பயன்படுத்துவது குறித்து அதிகாரிகளுடன் விவாதம்

கென்னடி முனை, நவ. 25—

அமெரிக்காவில் சுற்றுப்பயணம் செய்துவரும் தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள், கென்னடி விண்வெளி ஆராய்ச்சி நிலையத்திற்குச் சென்று பார்த்தார்; அடுத்த ஆண்டு மார்ச் மாதத்தில் சந்திரனுக்கு அனுப்பப்படவிருக்கும் 'அப்போலோ-16' விண்வெளிக்கல நிலையத்திற்கு முதல்வரை அழைத்துச் சென்று ஏற்பாடுகளையெல்லாம் சுற்றிக் காட்டினார்கள்.

ஓர் இலட்சம் ஏக்கர் நிலத்தில் களம் அமைத்திருக்கிறது; ரூ. 2,000 கோடி ஆண்டொன்றுக்குப் பராமரிப்புச் செலவாகிறது.

இந்த விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தில் 15,000 பேர் பணியாற்றுவதாக முதலமைச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டது.

சாதாரணமாக இதுபோன்ற விண்வெளி ஆராய்ச்சி நிலையமே முக்கிய பிரிவுகளுக்கு எல்லோரையும் அழைத்துச் சென்று காட்டமாட்டார்கள்; இங்கெல்லாம் கலைஞரை அழைத்துச் சென்று சுற்றிக் காண்பித்தார்கள்.

விண்வெளி ஆராய்ச்சி குறித்தும் அதை சமாதானப் பணிகளுக்குப் பயன்படுத்துவது குறித்தும் அமெரிக்க அதிகாரிகளோடு முதல்வர் விவாதித்தார்.

சிகாகோவில் வரவேற்பு

நவ. 22-ந்தேதி பிற்பகலில் சிகாகோ வந்து சேர்ந்த முதலமைச்சர் கலைஞரை அமெரிக்காவாழ் இந்தியப் பிரதிநிதிகளும் -- அதிகாரிகளும் வரவேற்றனர்; அவர்களுக்கு உலகத் தமிழ் மாநாட்டுப் படம் போட்டுக் காண்பிக்கப்பட்டது.

என்.வி.என்., ப.உ.ச., கி. மனோகரன் தொடர்பு

தொழிலாளர் நலத்துறை அமைச்சர் என். வி. நடராசன் அவர்கள் சிகாகோ நகரிலுள்ள கலைஞருடன் தொலைபேசிமூலம் தொடர்பு கொண்டு பேசினார்.

சிம்சன் தொழிலாளர் பிரச்சினை, பாண்டிச்சேரி அமைச்சரவை இலாகா மாற்ற விவகாரம் ஆகியவை பற்றிக் கலைஞருக்கு அவர் விவரம் தெரிவித்தார்.

உணவு அமைச்சர் ப. உ. சண்முகம் அவர்களும் தொலைபேசி மூலம் கலைஞருடன் தொடர்பு கொண்டு பேசினார்; அமெரிக்காவில் தற்போது குளிர் அதிகமாக இருக்கிறது என்று கலைஞர் தெரிவித்தார்.

நாஞ்சில் கி. மனோகரன் எம்.பி. அவர்களும் கலைஞருடன் தொடர்புகொண்டு பேசினார்; பாகிஸ்தானில் அவசர நிலைமை பிறப்பிக்கப்பட்டிருப்பது பற்றியும், பாகிஸ்தான் போர் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டது பற்றியும் முதல்வருக்குத் தெரிவித்தார்.

சி. பி. சிற்றரசு தொடர்பு

தமிழ்நாடு மேலவைத் தலைவர் சி. பி. சிற்றரசு அவர்களும் கலைஞருடன் தொடர்பு கொண்டார்; முதல்வர் கருணாநிதி உடல் நலம் பற்றி விசாரித்தார்; நல்ல ஆரோக்கியத்துடன் இருப்பதாக முதலமைச்சர் தெரிவித்தார்.

"இரண்டு மூன்று நாட்கள் அதிகமானாலும் பரவாயில்லை; நன்றாக உடல் பரிசோதனை செய்துகொண்ட பிறகு வாருங்கள்" என்று முதலமைச்சரிடம் சி. பி. சிற்றரசு கூறினார்.

சிற்றரசுவின் துணைவியார் சுலோசனா அம்மையாரும் கலைஞரின் உடல் நலம் பற்றி விசாரித்தார்.

தமிழக என். ஜி. ஓ. (அரசாங்கஊழியர்கள்) சங்கத் தலைவர் சிவ. இளங்கோ நேற்று அமெரிக்காவுக்கு தொலைபேசிமூலம் முதல்வர் கருணாநிதியுடன் பேசினார்.

கோவையில் உள்ள அரசாங்க ஊழியர்களுக்கு நகர ஈட்டுப் படி கொடுக்க ஏற்பாடு செய்ததற்கு நன்றி தெரிவித்தார்.

சிகாகோ பல்கலைக் கழக அரசியல் கருத்தரங்கில் சிறப்புச் சொற்பொழிவு

முதலமைச்சர் கருணாநிதி அவர்கள், சிகாகோ பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற அரசியல் கருத்தரங்கில் சிறப்புச் சொற்பொழிவாற்றினார்.

இக்கருத்தரங்குக்கு ஏராளமான ஆசிரியர்களும் -- மாணவர்களும் வந்திருந்தனர்.

தமது உரையில் முதலமைச்சர் கலைஞர், தமிழகத்தில் சுயமரியாதை இயக்கம் தோன்றி வளர்ந்த வரலாறு -- பெரியார் அவர்களின் சமூக, அரசியல் தொண்டுகள் -- அதனைத் தொடர்ந்து பேரறிஞர் அண்ணா அவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தோற்றுவித்து -- அதனை அரசியல் கட்சியாகவும், ஆளும் கட்சியாகவும் உருவாக்கிய வரலாறு -- அனைத்திந்திய அரசியலில் மறைந்த தலைமையமைச்சர் ஜவகர்லால் நேருவின் சனநாயகக் கொள்கைகள் ஆகியவை பற்றியெல்லாம் விளக்கிக் கூறினார்.

வினாக்கள் எழுப்பினர் -- உரிய பதில்களைத் தந்தார்

சொற்பொழிவைத் தொடர்ந்து ஏறத்தாழ ஒரு மணி நேரம் கருத்தரங்கிற்கு வந்திருந்த ஆசிரியர்களும் -- மாணவர்களும் பல்வேறு கேள்விகளைக் கேட்டார்கள்; அதற்கு உரிய பதில்களைக் கலைஞர் அவர்கள் தெளிவுற அளித்தார்.

சிறப்பு விருந்து

அதன்பின், பல்கலைக் கழகப் பேராசிரியர் ருடால்ப் -- சிகாகோ பல்கலைக் கழக மனைவுக்குள், முதலமைச்சர் கருணாநிதி அவர்களுக்குச் சிறப்பு விருந்து ஒன்றினை அளித்தார்.

அவ்விருந்தில் ஆசிரியர் -- மாணவர்களும் பெரும் அளவில் கலந்துகொண்டனர்.

பரீட்சை முறையில் மாறுதல்

மாணவர்கள் சாதனையைத் தக்க முறையில் மதிப்பிடுவது அவசியமென வற்புறுத்தல்

புதுடில்லி, நவ. 24—

பல்கலைக் கழகங்களின் பரீட்சை முறையில் புரட்சிகரமான சீர்திருத்தங்களை மக்களவை உறுப்பினர்கள் பலரும் கோரினர்.

மனப் பாட முறைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கும் தற்போதைய பரீட்சை முறை நீக்கப்பட வேண்டுமென்றும் ஆண்டு முழுவதும் மாணவர்களின் சாதனையைத் தக்கவாறு மதிப்பிட வேண்டும் என்றும் அவர்கள் கூறினர்.

பல்கலைக் கழக மானியக் குழு ஆண்டு அறிக்கைமீது அவையில் விவாதம் தொடர்ந்து நடந்தது.

"பரீட்சை முறை பற்றிய துணைவேந்தர்கள் மாநாட்டின் சிபாரிசுகளைச் செயல்படுத்த உருவான நடவடிக்கைகளை பல்கலைக் கழக மானியக் குழு ஏன் கொடுக்கவில்லை?" என்று மதுதந்தவாடே (சோஷ) கேட்டார்; 'இந்தச் சிபாரிசுகள், மாணவப் பிரதிநிதிகளுக்கும் சம்மதமானவை' என்று அவர் சொன்னார்.

"பல்கலைக் கழக மட்டத்தில் ஆங்கிலம் அல்லது இந்தியைப் பயிற்று மொழியாக்க வேண்டும்; ஆய்வுக்கூட வசதிகளைப் பார்வையிட்ட பின்னர் கல்லூரிகளுக்கு அங்கீகாரம் வழங்கப்பட வேண்டும்" என்றார்.

"கல்வித் தரம் சீர்குலைந்துவருவதன் மூலகாரணத்தை ஆராய வேண்டும்" என்று திருமதி மோட்பிரே (நியமன உறுப்பினர்) கூறினார்.

"பல்கலைக் கழகத்துக்கு ரூ. 24 கோடி ஒதுக்கப்பட்டிருப்பது போதாது: அதனை உயர்த்த வேண்டும்" என்று ஓய். எஸ். மகாஜன் (இந்திரா காங்.) குறிப்பிட்டார்.

"தேசிய வளர்ச்சியுடன் உயர் தரக் கல்வியை இணைக்கவேண்டும்" என்று என். சி. பராசர் (இ. கா.) கூறினார்.

உதகையிலிருந்து சென்னைக்குவரும் பாலின் அளவு உயர்த்தப்படுகிறது

சென்னை, நவ. 24—

"உதகையிலிருந்து சென்னை நகருக்குத் தருவிக்கப்படும் பாலின் அளவு உயர்த்தப்பட்டிருக்கிறது"

என்று உணவுத்துறை செயலாளர் ராம்சந்தர் நிருபர்களிடம் கூறினார்.

உதகையில் உள்ள கூட்டுறவுப் பால் வழங்கு சங்கம் தன்னிடம் உள்ள உபரி பாலை சாக்கடையில் கொட்டியதாக வந்த தகவல் குறித்து அவரிடம் நிருபர்கள் கேட்டபோது அவர் குறிப்பிட்டதாவது :—

"இது குறித்து எனக்கு அதிகாரபூர்வமான தகவல் இல்லை; விவரமான அறிக்கை அனுப்பிவைக்கும்படி கோரியிருக்கிறேன்.

"சென்னை நகரத் தேவைக்காக வழக்கமாக கோடை மாதங்களில் உதகையிலிருந்து தருவிக்கப்படும் பாலின் அளவைவிட 50 சதவிகிதம் அதிகமாக அக்டோபர் -- நவம்பர் -- டிசம்பர் போன்ற குளிர் மாதங்களில் வாங்குவோம்; உதகையிலிருந்து தினசரி 3,800 லிட்டர் முதல் 4,000 லிட்டர் பால்வரை மாதவரம் பால் பண்ணை வாங்கிக்கொண்டிருந்தது; இப்போது இதை அதிகரித்து 7,000 லிட்டர் பால் உதகையிலிருந்து தருவிக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

"சென்னை நகரில் நாள் ஒன்றிற்கு 70,000 லிட்டர் பால் மாதவரம் பால் பண்ணைமூலம் வழங்கப்படுகிறது. பாலை புட்டிகளில் (பாட்டில்களில்) அடைக்காமல் பெரிய குவளைகளில் வைத்து வழங்க ஏற்பாடு செய்தால் இன்னும் அதிக அளவு பால் வழங்க முடியும்; புட்டிகளில் அடைத்து வழங்குவதில் காலதாமதம் போன்ற இதர சங்கடங்கள் ஏற்படுகின்றன.

"மாதவரம் பால் வழங்குவதற்காக நகரில் 200-க்கும் மேற்பட்ட விற்பனை --- விநியோக நிலையங்கள் உள்ளன. மாதவரம் பால் கார்டு கேட்டு விண்ணப்பித்துக்கொண்டவர்களுக்கெல்லாம் வழங்கப்பட்டுவிட்டது.

"பால் கறவைக்காக 8 இயந்திரங்களை அனுப்புவைக்கும்படி மத்திய அரசிடம் கோரப்பட்டிருக்கிறது.

மத்திய மருந்துத் தொழிற்சாலையில் விசித்திர நிலை

மலிவான மருந்துகளை அதிக விலைக்கு விற்றும் நட்டம் ஏற்படுகிறதாம்

நாடாளுமன்றப் பொதுக் கணக்குக் குழுவின் கடும் கண்டனம்

புதுடில்லி, நவ. 23—

மத்திய சுகாதாரத் துறையின் கீழுள்ள மருத்துவச் சாதனங்கள் பண்டகசாலை, நாளுக்கு நாள் சீரழிந்து வருவது பற்றி நாடாளுமன்றத்தின் பொதுக் கணக்குக் குழு ஆழ்ந்த கவலை தெரிவித்திருக்கிறது; இத்தொடர்பில் அது கருத்தறிவித்திருப்பதாவது :—

1964—65-ல் இதற்குக் கிடைத்த இலாபம் ரூ. 23.43 இலட்சமாகும்; 1965—66-ல் இது ரூ. 18.11 இலட்சமாகக் குறைந்துவிட்டது; ஆனால், 1966—67-ல் இதற்கு ஏற்பட்ட இழப்பு ரூ. 4.76 இலட்சமாகும்.

இதில் ஒரு விசித்திரம் என்னவென்றால், 1964—65-ல் இருந்த விற்பனை ஐந்து மடங்கு அதிகமாக இருந்ததுதான்.

மேலும், சுலபமாக வெளியில் கிடைக்கும் சுமார் 250 இனங்களை பம்பாய், சென்னை ஆகிய இடங்களிலுள்ள அரசு மருந்துத் தொழிற்சாலைகள் உற்பத்திச் செய்கின்றன; ஆனால், வெளி விலைகளைவிட இவர்களின் விலை அதிகமாக இருக்கிறது.

அன்றியும், இந்தத் தொழிற்சாலைகளில், நுட்ப அறிவுள்ள சிப்பந்திகளைவிடத் தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது.

வெளியில் மலிவான விலைக்குக் கிடைக்கும் இந்த மருந்துகளை அரசுத் தொழிற்சாலைகளில் தயாரிக்க வேண்டிய அவசியமே இல்லை."

தமிழ்நாட்டின் 20 முக்கிய நகரங்களில் பாதுகாப்பு நடவடிக்கைத் திட்டங்கள்

இருட்டடிப்பு ஒத்திகையைப் படை விமானம் கண்காணிக்கும்

நோக்கம் பற்றி அதிகாரி விளக்கம்

சென்னை, நவ. 25-

"போர் நெருக்கடி ஏற்பட்டால் தமிழ்நாட்டிலுள்ள 20 முக்கிய நகரங்கள் -- கடற்கரைப் பகுதிகள் -- முக்கியத் துறைமுகங்கள்-- விமான நிலையங்கள் ஆகியவைகளில் என்னென்ன பாதுகாப்பு நடவடிக்கைகளைச் செய்ய வேண்டுமோ அவைகளைச் செய்வதற்கான திட்டங்கள் தயாராக இருக்கின்றன; அதற்கான அறிக்கையையும் நாங்கள் தயாராக வைத்திருக்கிறோம்; அரசு உத்தரவிட்டால் உடனடியாகப் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்"

என்று மாநிலப் பாதுகாப்புத் துறை இயக்குநர் எஸ். பரமகுரு தெரிவித்தார்; செய்தியாளரிடம் அவர் பேசுகையில், 'வரும் சனிக்கிழமையன்று நடைபெறவிருக்கும் இருட்டடிப்பு ஒத்திகை, முதல் கட்ட எச்சரிக்கை நடவடிக்கையே' என்றும் தெரிவித்தார்; இத்தொடர்பில் மேலும் அவர் கூறியதாவது:—

வரும் சனிக்கிழமையன்று இரவு 7 மணியிலிருந்து 9 மணிக்குள் அரைமணி நேரம் நகரில் இருட்டடிப்பு ஒத்திகை நடத்திப் பார்க்கப்படும்; அந்த நேரத்தில் இந்திய விமானப் படையைச் சேர்ந்த விமானம், நகர்மீது வட்டமிட்டு மேற்பார்வையிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஒத்திகை நடக்கும்போது நகர் எப்படி இருக்கிறது -- எந்தெந்தப் பகுதியில் இருட்டடிப்புச் சரியாக இல்லை -- என்பது போன்றவற்றை அது கண்காணிக்கும்.

அரசு உயர்மட்ட அதிகாரிகள், அண்ணா சாலையில் உள்ள மிக உயரமான 14 அடுக்குக் கட்டடமான எல்.ஐ.சி. கட்டடத்தின் மாடியில் இருந்தபடி மேற்பார்வையிடுவார்கள்; 'வீடுகள் — கட்டடங்கள் — போக்குவரத்து வாகனங்கள் மூலம் வெளிச்சம் தெரியாமல் நன்கு மறைக்கிறதா' என்று அவர்கள் பார்ப்பார்கள்.

எதிரிக்கு நாம் இருக்கும் இடம் தெரியாமல் இருக்கச் செய்வதே இந்த ஒத்திகையின் நோக்கமாகும்.

சங்குகள் ஒலிக்கும்

ஒத்திகை தொடங்குவதைத் தெரிவிப்பதற்காக நகரெங்கும் போலீசு நிலையங்களில் உள்ள 40 சைரன்கள் (சங்கு) ஊதப்படும்; அவை, விட்டுவிட்டு ஒலிக்கும்.

இதேபோன்று, நகரைச் சுற்றி அமைந்துள்ள தொழிற்சாலைப் பகுதிகளில் உள்ள தொழிற்சாலைகளில் இருக்கும் சங்குகளையும் இவற்றுடன் இணைத்து -- நெருக்கடி காலங்களில் மக்களுக்குப் பாதுகாப்பு எச்சரிக்கை செய்யப் பயன்படுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது.

இப்போது இந்த ஒத்திகைகள், சென்னை நகரையும் -- சுற்றுப்புறப் பகுதியையும் சேர்ந்த இடங்கள் வரையில்தான் நடைபெறும்; அவசியம் ஏற்பட்டால் தமிழகமெங்கும் செயல்படுத்தும் திட்டம் ஏற்கனவே தயாராக உள்ளன.

சங்குகள் ஒலித்ததும் செய்யவேண்டியது என்ன?

சனிக்கிழமையன்று அபாயச் சங்கு ஒலித்ததும், நகரில் தெரு மின் விளக்குகள் அனைத்தும் அணைந்துவிடும்; கட்டடங்கள் -- வீடுகளில் உள்ளே இருந்து விளக்குகளின் வெளிச்சம் வெளியே தெரியாதவாறு மறைத்துவிட வேண்டும்; மொத்தத்தில் நகரே இருளில் மூழ்க வேண்டும்; அதுதான் பொருள்.

தொழிற்சாலைக் கூரைகளில் உள்ள கண்ணாடிகளின் வழியாகக்கூட வெளிச்சம் வெளியே தெரியக்கூடாது; காகிதங்கள் போட்டு மறைக்க மிகக் குறுகிய காலமே உள்ளதால், அன்று மாலை 7 மணியிலிருந்து 8 மணி வரை தொழிற்சாலைகள் இயங்காமல் இருக்கக் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

திரைப் படங்கள்

'இருட்டடிப்பு' என்றால் என்ன -- எவ்வாறு வீடுகளில் -- அலுவலகங்களில் -- தொழிற்சாலைகளில் வெளிச்சம் வெளியே தெரியாமல் மறைத்து வைக்கப்பட வேண்டும்? -- வாகனங்களில் களில் உள்ள விளக்குகள் எவ்வாறு மூடி மறைக்கப்பட வேண்டும்? குண்டு விழுந்து விபத்துக்கள் ஏற்பட்டால் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும்? -- முதல் உதவிச் சிகிச்சைகளை எவ்வாறு செய்வது? -- என்பன போன்ற விவரங்களையும், இரண்டாவது இராணுவ அணியாகச் செயல்படக்கூடிய ஊர்க்காவல் படையினரின் சேவைகள் -- அப்படை ஆற்றக்கூடிய பணிகள் ஆகியவைகளை விளக்கியும், மத்திய திரைப் படப்பிரிவு எடுத்துள்ள மூன்று பிரசாரத் துண்டுப் படங்கள், 27-ந் தேதியிலிருந்து நகரில் உள்ள திரைப் படக் கொட்டகைகளில் காட்டப்படும்; பத்து தமிழ் பதிப்புகளும் -- நான்கு ஆங்கிலப் பதிப்புகளும் (பிலிம் பிரிண்ட்) எடுக்கப்பட்டு வழங்கப்பட்டிருக்கின்றன."

கலைஞர் விளக்கம்

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கின்ற வகையில் எங்கு - எப்போது - எது நடந்தாலும், தமிழகத்திலுள்ள நாங்கள் உள்ளபடியே மிகுந்த கவலை கொள்கிறோம்; தமிழ்நாட்டிலிருந்து வெகு தூரத்தில் டில்லி இருப்பதால், தமிழ்நாட்டில் எது நடந்தாலும் டில்லியைப் பாதிக்காது என்று நீங்கள் கருதுகிறீர்களா? 'நாங்கள் வங்க தேச நிகழ்ச்சிகளால்பெரிதும் கவலை கொள்கிறோம்; பல இலட்சக் கணக்கான அகதிகளை அனுப்பி ஆக்கிரமிப்பது என்பது, ஒரு நவீன படையெடுப்புத்தான்; தாயைப் பாதிப்பது சேயைப் பாதிப்பதுபோல்தான்; ஆகவே இந்திய அரசைப் பாதிப்பது எங்களைப் பாதிக்கும்."

ஆதரவுக்கு நன்றி

"இந்தியாவின் இலட்சியத்திற்காக அமெரிக்க மக்களும் -பத்திரிகைகளும் கொடுத்த ஆதரவிற்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அகதிகளின் பெருவெள்ளம், இந்தியா தாங்க முடியாத கடினமான சுமையாகும்.

"இந்தியாவின் வழக்கிலுள்ள நியாயத்தைப் பற்றிய செய்தியை அமெரிக்கப் பத்திரிகைகள் இன்னும் விரிவாகப் பரப்பிட வேண்டும்; ஏனெனில், அமெரிக்காவைப் போலவே இந்தியாவும் சனநாயகத்திற்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டது; இந்த இரண்டு நாடுகளும், 'மக்களால் ஆன அரசாங்கம்' எனும் பொதுவான இலட்சியத்தைக் கொண்டவை!"

மாநில அரசின் வளர்ச்சித் திட்டங்கள் பற்றிய பல்வேறு அம்சங்களைக் குறித்துப் பத்திரிகையாளர் முதல்வருடன் கருத்துரையாடினர்.

தேசியக் கௌரவ அவமதிப்புத் தடுப்பு மசோதா நிறைவேற்றம்

புதுடில்லி, நவ. 25—

தேசியக் கௌரவ அவமதிப்புத் தடுப்பு மசோதாவை நாடாளுமன்ற மேலவை நிறைவேற்றியது.

வலது கம்யூனிஸ்ட் உறுப்பினர் பூபேஷ் குப்தா தெரிவித்த சிறிய திருத்தத்தை உள்துறை துணையமைச்சர் எப். எச். மோசின் ஏற்றுக்கொண்டார்; அந்தத் திருத்தத்துடன் மசோதா நிறைவேறியது.

சரியான வார்த்தை இந்திய ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கண்ட முடிவுக்கு வந்திருக்கிறது.

மத்திய சட்டங்களை மொழி பெயர்ப்பதில் ஈடுபட்டுள்ள கமிஷன் இந்திய மொழிகளில் சரியான வார்த்தைகளைக் கண்டு பிடிக்கும் முயற்சியைக் கைவிட்டு, வட்டார மொழிகளில், 'நியூசன்சு' என்ற வார்த்தையையே வைத்துக்கொள்வது என முடிவு செய்துள்ளது.

கமிஷன் தலைவர் எஸ். சி. மிச்ரா, இத்தகவலை நிருபர்களிடம் கூறினார்.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

27--11--71

குமாரபாளையம்

நகர தி. மு. க. சார்பில் மாலை 6-30 மணிக்கு சந்தைத் திடலில்; தலைவர்: ஏ. எல். கே. தியாகராசன்; பேசுவோர்: அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன், அமைச்சர் எஸ். ஜே. சாதிக் பாட்சா, எஸ். எஸ். எம். சுப்பிரமணியம், மற்றும் பலர்.

தொழிலாளர் நல அமைச்சர்

என். வி. நடராசன்

நிகழ்ச்சிகள்

நவ. 27 காலை 10-30 மணி: ஜோலார்பேட்டை; 11-மணி: நாட்ரம்பள்ளி ஊராட்சி ஒன்றிய வரவேற்பு; மாலை 3-மணி: கந்திலி ஊராட்சி ஒன்றிய வரவேற்பு; 4-30 மணி: நத்தம் தரைமட்ட நீர்த்தேக்க தொட்டி திறப்பு; 5-மணி: நத்தம் அரிசன காலனி நீர்த்தேக்க தொட்டி திறப்பு; 5-30 மணி: எர்ரம்பட்டி பள்ளிக் கட்டடம் திறப்பு; 6-30 மணி: சின்னபேராம்பட்டி பள்ளிக் கட்டடம் திறப்பு; இரவு 8-மணி: குரும்பேரி ஊராட்சி மன்றக் கட்டடம் திறப்பு.

போக்குவரத்துத்துறை அமைச்சர்

ச. இராமச்சந்திரன்

நிகழ்ச்சிகள்

நவ. 26 பிற்பகல்: திருச்சி— போக்குவரத்து அலுவலர்களிடையே கலந்து பேசுதல் -- பணிமனையைப் பார்வையில்; 3-மணி: பொன்மலை இரயில்வே பணிமனையைப் பார்வையிடல்; மாலை 6-மணி: தென் பகுதி இரயில்வேத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பொன்மலை கிளைச் சங்க முதலாண்டு விழாவில் கலந்துகொள்ளல்.

நவ. 27: மதுரை— போக்குவரத்துத் துறை அலுவலர்களுடன் கலந்துரையாடல் --பணிமனையைப் பார்வையிடல்.

நவ 28 29: நாகர்கோயில்— போக்குவரத்துத் துறை அலுவலர்களுடன் கலந்துரையாடல் -- பணிமனையைப் பார்வையிடல்.

இரங்கூனில் அமைச்சர் சத்தியவாணிமுத்து

தி. மு. கழகச் சார்பில் சிறப்புமிக்க வரவேற்பு

அண்ணா பிறந்த நாள் விழாவில் பங்கேற்பு

இரங்கூன், நவ. 24—

பர்மா -- இலங்கை ஆகிய நாடுகளிலிருந்து குடிபெயர்ந்து வரும் தமிழர்களை, அந்தமான் -- நிகோபார் தீவுகளில் குடியேற்றி, அவர்களுக்கு நல்வாழ்வு அளிக்கும் திட்டங்கள் பற்றி ஆலோசிப்பதற்காக அமைச்சர் சத்தியவாணிமுத்து அவர்கள் அந்தமான் -- நிகோபார் தீவுகளுக்குச் சென்றிருந்தாரல்லவா? ஒரு வார காலம் அங்கு சுற்றுப்பயணம் செய்த அவர் நேற்று காலை பர்மாவுக்குச் சென்றார்.

இரங்கூன் விமான நிலையத்தில், பர்மா தி. மு. கழகச் சார்பில் அவருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

பிற்பகலில் இரங்கூன், காந்தி நினைவு மண்டபத்தில் நடந்த அண்ணா பிறந்த நாள் விழாவில் கலந்துகொண்டு அண்ணா உருவப் படத்தைத் திறந்து வைத்துச் சிறப்புரையாற்றினர்.

இரங்கூனில் உள்ள இந்தியத் தூதரைச் சந்தித்துப் பர்மா தமிழர்கள் பிரச்சினை பற்றி விவாதித்தார்.

இவ்வார இறுதியில் சென்னைக்குப் புறப்பாடு

பர்மாவின் வரலாறு சிறப்புமிக்க இடங்களைச் சுற்றிப் பார்த்துவிட்டு அவர் இவ்வார இறுதியில சென்னைக்குத் திரும்புவார்; திரும்பும் தேதி பின்னர் அறிவிக்கப்படும்.

இராணுவத்திற்கு ஆள் திரட்டல்

பாகிஸ்தான் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறது

புதுடில்லி, நவ. 25—

'அவசர நிலைமை' பிரகடனம் செய்துள்ள பாகிஸ்தான் அரசாங்கம், இராணுவத்திற்கு ஆள் திரட்டுவதில் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறது.

இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்றவர்கள் -- 'ரிசர்வ்' பட்டியலில் உள்ளவர்கள் -- விடுமுறையில் இருக்கும் இராணுவத்தினர் எல்லோரும் உடனே வேலைக்குத் திரும்ப வேண்டும் --- என்று பாகிஸ்தான் அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறது;

இராவல்பிண்டியில் உள்ள இராணுவ தலைமை அலுவலகத்தில் அவர்கள் ஆஜராக வேண்டும்; தனிப்பட்ட முறையில் தங்களுக்கு உத்தரவு வரும் என்று காத்திருக்காமல்உடனே வந்து சேரவேண்டும்" என்று அந்த உத்தரவில் கூறப்பட்டிருக்கிறது.

டாக்காவில் மீண்டும் ஊரடங்குச் சட்டம்

புதுடில்லி, நவ. 25-

டாக்காவின் பல பகுதிகளிலும் குண்டுகள் வெடித்து சேதம் ஏற்பட்டதைத் தொடர்ந்து மீண்டும் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

நேற்று மாலை 5 30 மணிக்குப் பிறப்பிக்கப்பட்ட இந்த ஊரடங்குச் சட்டம் எதற்காகப் பிறப்பிக்கப்பட்டது என்றோ, எவ்வளவு நேரத்துக்கு நடைமுறையில் இருக்கும் என்றோ அறிவிக்கப்படவில்லை.

வெடிகுண்டு வீச்சுகள்

பி.பி.சி வானொலியின் டாக்கா நிருபர் தெரிவித்த செய்திப்படி, டாக்காவில் 7 இடங்களில் வெடிகுண்டு வீச்சுகள் நடைபெற்றிருக்கின்றன; காலையில் ஓர் இடத்தில் வன்முறையும் நடைபெற்றிருக்கிறது.

விடுதலை வீரர்களின் குறிக்கோள் என்ன?

கொரில்லாக்கள், இப்போது சணல் கிடங்குகளைத் தாக்குவதைத் தங்கள் குறிக்கோளாகக்கொண்டிருக்கின்றனர்.

இதுவரை 20 சணல் கிடங்குகள் தீக்கிரையாக்கப்பட்டிருக்கின்றன. இங்குள்ள ஊழியர்கள் பலரும் ஈத் விடுமுறைக்காகச் சென்றவர்கள் இன்னமும் வேலைக்குத் திரும்பவில்லை என்று கூறப்படுகிறது.

ஒரு காலன் மண்ணெண்ணெய் ஐந்து ரூபாயாம்!

கிழக்கு வங்கத்தில் இன்றியமையாப் பொருட்கள் பஞ்சம் கடுமையாகிவிட்டிருக்கிறது. ஒரு காலன் மண்ணெண்ணெய் 5 ரூபாய்க்கு விற்கப்படுகிறதாம்.

கடைகளில் வாங்குபவர்களைக் காண முடிவதில்லையாம். இராணுவத்தினர்கூடப் பெருமளவில் காணப்படவில்லையென்றும், அவர்கள் எங்கோ 'முக்கியமான இடங்களுக்கு' அனுப்பப்பட்டிருக்கிறார்கள் என்றும் கூறப்படுகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, [illegible] தெரு, சென்னை-10) அச்சிட்டு வெளியிடப்பெற்றது.